தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1972 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Landslide at Naduvattam.

*3-*S.N.Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether 8 workers were killrd in the Landslide at Naduvattam, Nilgiris District on 10th March 1972 while doing construction work under Tamil Nadu Electricity Board;

(*b*) if so, details thereof; and

(*c*) the compensation, if any, paid to them?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) 10—3—1972 அன்று நடுவட்டம் மின் திட்டத்தின் நீர் கொண்டு செல்லும் கால்வாயில் காண்ட்ராக்டரால் நியமிக்கப்பட்ட ஐம்பது பணியாட்கள் பணி செய்து கொண்டிருக்கும்போது சுமார் 5 மணி அளவில் மண் சரிவினால் பத்து ஆட்கள் மண்ணில் புதையுண்டு விட்டார்கள். மீட்பு வேலை உடனடியாகச் செய்யப்பட்டு பத்து பேர்கள் மீட்கப்பட்டதில் எட்டு பேர்கள் இறந்து விட்டனர். இருவர் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு நலம் பெற்றனர்.

(உ) விபத்தில் இறந்த எட்டு பேர்களுடைய குடும்பத்திற்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 500 தற்காலிகமாக நிவாரணம் மின்சார வாரியத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி இக்குடும்பத்தாருக்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமோ அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[1972 மார்ச் 27

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த உதகை—மைசூர் ரோட்டில் இருக்கக்கூடிய நடுவட்டத்தில் தமிழ்நாடு மின்சார போர்டினுல் இந்த டைவர்ஷனுக்காகப் போடப்பட்ட இந்த ரோட்டில் ஏற்பட்ட விபத்தில் சிலர் இறந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் அரசுதான் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடைக்கால நிவாரணமாக ஐநூறு ரூபாய் கொடுக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஐம்பது தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திய அந்த கண்டிராக்டரிடமிருந்து மேற்கொண்டு சட்டப்படி கிடைக்க வேண்டிய நஷ்டயீட்டுத் தொகையைப் பெற்று, அந்தக் குடும்பத்தாருக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்தக் கண்டிராக்டருடைய வேலை செய்த பணம் ஒரு லட்ச ரூபாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டப்படி கண்டிராக்டரிடமிருந்து உயிரிழந்தோர்களுடைய குடும்பத்தாருக்கு எந்த அளவுக்குத் தொகை பெற்றுத் தர முடியுமோ அந்த அளவுக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தத் தொழிலாளர்கள் ஒரு ஸ்தாபனத்தின் கீழ் இல்லாத தொழிலாளர்கள். அவர்கள் இறந்து விட்டால் ஒரு மாதத்திற்குள்ளாக காம்பென்ஸேஷன் கமிஷனரிடம் மனுச் செய்ய வேண்டிய நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, இம் மாதிரியான ஏற்பாடுகளை எலெக்ட்ரிசிடி போர்டாரே கவனித்து, அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : உடனடியாக ஐநூறு ரூபாய் நிவாரணம் அளித்திருக்கிறோம். மேற்கொண்டும் வாரியத்தின் மூலமாகக்கூட ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். சட்டப்படி கண்டிராக்டரிடமிருந்து ஏதாவது உடனடியாக வாங்கிக் கொடுக்க முடியுமானுல், உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது அந்த விபத்திற்குப் பின்னுல் வேலை தொடர்ந்து நடைபெறுகிறதா ? வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் வந்ததே. அப்படியானுல், சரியான பாதுகாப்புடன் வேலை நடைபெற கண்காணிக்கப்படுமா ?

1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குரிய எச்சரிக்கை செய்ய பட்டு வேலை துவங்குகிறார்கள். மண்ணிலே ஒரு "லேயர்" தனியாக இருந்ததால், அது எதிர்பாராத காரணத்தால், "ஸ்லைட்" ஆகி விட்டது. இனிமேல் எச்சரிக்கையோடு வேலைகளெல்லாம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அதிகாரிகள் மூலமாக நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த இறந்துபோன தொழிலாளி குடும்பங் களுக்குக் கொடுக்க வேண்டிய முழு காம்பன்ஸேஷன் கொடுக்கப்படு வதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ? அதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதுபோன்ற விபத்துக்கள் நடந்துவிட்டால் உடனடியாக நிவாரணம் ஐநூறு ரூபாய் கொடுத் திருக்கிறோம், வாரியத்தின் சார்பாக. சட்டப்படி என்ன என்ன கொடுக்க முடியுமோ அதெல்லாம் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு இலட்ச ரூபாய் அந்தக் கண்டிராகட ருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சட்டரீதியாக எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்தப் பணத்தில் எள்ளளவும் குறையாது வழங்கப் படும்.

Representation from Voters Forum.

* 715 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether the Chief Electoral Officer of this State has received any representation from the Voters Forum, Madras, about the electoral revised lists of Graduates' and Teachers' Constituencies of Madras and other places around the 3rd week of October 1971; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை; வாக்காளர் மன்றம் 22—10—1971-ஆம நாளிட்ட தனது முறையீட்டில், பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளில் வாக்காளர்களைச் சேர்த்தல் பற்றியும், வாக்காளர்களைப்